# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

**අංක 2491/ 33 - 2026 ජූනි මස 03 වැනි බදාදා - 2026.06.03**

2491/33 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு யூன் மாதம் 03 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

சம்பளச்சபைகள் கட்டளைச் சட்டம்

அறிவித்தல்

ஆடை உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச்சபை

சம்பளச்சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 136) பிரிவு 30 இன் கீழ் ஆடை உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச்சபையினால் ஆக்கப்பட்டு இங்கு தரப்பட்டுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ள கௌரவ தொழில் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானங்கள், கட்டளைச்சட்டத்தின் பிரிவு 29 (3) இன் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றன.

இந்தத் தீர்மானங்கள் 2026 சனவரி மாதம் 01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருகின்றன.

**எஸ். எம். பியதிஸ்ஸ**
செயலாளர்
தொழில் அமைச்சு.

"மெஹெவர பியச"
கொழும்பு 05
07.05.2026.


1A – G 46909 – 04 (2026/05)

*இவ் அதிவிசேஷட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

### அட்டவணை

ஆடை உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச்சபையினால் ஆக்கப்பட்டு, 1966 மார்ச் 25 ஆம் திகதிய 14688 ஆம் இலக்க விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் அட்டவணையில் விரிவாகத் தரப்பட்டவையும் காலத்துக்கு காலம் மாற்றப்பட்டவையும், 2018 யூலை 26 ஆம் திகதிய 2081/48 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியின் மூலம் இறுதியாக மாற்றப்பட்டவையுமான முடிவுகள் அவ்வட்டவணையின் II ஆவது பகுதிக்காகப் பின்வருமாறு புதிய பகுதி சேர்க்கப்பட்டு மேலும் மாற்றியமைக்கப்படுகிறது.

### பகுதி II

### மாதமொன்றுக்கென வழங்கவேண்டிய ஆகக்குறைந்த சம்பள அளவுகள்

**வேலையாட்களின் வகுப்புகள்**

**I (அ) ஆவது தரம்** : வடிவமைப்பாளர், ஆடை தைப்பவர்கள், வடிவமைப்புக்குத் துளையிடுவோர், டிஸ்கட் வழங்குபவர்கள்.

**I (ஆ) ஆவது தரம்** : தலைவர்கள் அல்லது பிரிவு மேற்பார்வையாளர்கள்.

**II ஆவது தரம்** : துணி வெட்டுவோர் (கையால்), துணி வெட்டுவேர், எண்ணெய் இடுவோர் மற்றும் இயந்திரத்தைப் பழுதுபார்ப்போர், இறுதியாகப் பரிசோதிப்போர்.

**III ஆவது தரம்** : பரிசோதிப்போர் மற்றும் தரம் பிரிப்போர், துணியிலுள்ள சுருக்கங்களை நீக்கும் தொழிலாளர் (ஆண்கள்), பல்வேறு சிறு வேலைகளுக்கான வேலையாட்கள் (பெண்கள்), முத்திரையிடுவோர் (பெண்கள்), தையல் இயந்திர இயக்குனர்கள், மின்னழுத்தி இயக்குபவர்கள், விநியோகிக்கும் வேலையாட்கள் (பெண்கள்), இயந்திரத்தால்/ கையால் வரைபு அலலது படமொன்றைத் தைக்கும் (Embroidery) வேலையாட்கள்.

**IV ஆவது தரம்** : துணி விரிப்போர் (ஆண்கள்), துணி விரிப்போர் (பெண்கள்), பொதி செய்வோர், பொலிதீன்/ செலபேன் பைகன் மற்றும் காட்போட் பெட்டிகள் தயாரிப்போர், தேர்ச்சியற்ற வேலையாட்கள் மற்றும் களஞ்சிய வேலையாட்கள்.

**V ஆவது தரம்** : பழகுபவர்களும் தொழிற்பயிற்சி பெறுபவர்களும்

இங்கு பழகுபவர்களும் தொழிற்பயிற்சி பெறுபவர்களும் ஆகக்கறைந்தது 156 நாட்களுக்காவது அவ்வாறான பயிற்சியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**மாதமொன்றுக்கென வழங்கவேண்டிய ஆகக்குறைந்த சம்பள அளவுகள்**

| சேவை வருடம் | I (அ) ஆவது தரம் (ரூ.) | I (ஆ) ஆவது தரம் (ரூ.) | II ஆவது தரம் (ரூ.) | III ஆவது தரம் (ரூ.) | IV ஆவது தரம் (ரூ.) | V ஆவது தரம் (ரூ.) |
|---|---|---|---|---|---|---|
| 1 ஆவது வருடம் | 32,650.00 | 32,100.00 | 30,700.00 | 30,600.00 | 30,000.00 | 20,000.00 |
| 2 ஆவது வருடம் | 32,850.00 | 32,275.00 | 30,850.00 | 30,725.00 | 30,100.00 | |
| 3 ஆவது வருடம் | 33,050.00 | 32,450.00 | 31,000.00 | 30,850.00 | 30,200.00 | |
| 4 ஆவது வருடம் | 33,250.00 | 32,625.00 | 31,150.00 | 30,975.00 | 30,300.00 | |
| 5 ஆவது வருடம் | 33,450.00 | 32,800.00 | 31,300.00 | 31,100.00 | 30,400.00 | |

EOG 06-0006

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.